# “கையில் துடைப்பம்! தோளில் துப்பாக்கி!!”


திராவிடநாடு

மலர் 11 | 4—1 53 | இதழ் 27

விலை 1 அணா


## கவனத்தைக் கவரும் பரிசு

## விஜயலட்சுமிக்கு கிடைத்தது

### விளக்கம் அறிவாரா பண்டிதநேரு?

எகிப்து வீரர், தளபதி நகீப், இந்தியப் பிரதமரின் தங்கை விஜயலட்சுமி தேவிக்குப் பரிசளித்திருக்கிறார், ஒரு படத்தை.

'ஐ. நா.' பவனி முடிந்து திரும்பிய அம்மையார், எகிப்துக்குள் நுழைந்து, தளபதியைச் சந்தித்தபோது, அவரது அறையில் கண்டாராம் அந்தப் படத்தை. கண்ணிமைக்காது, நோக்கினாராம். 'இந்தாருங்கள்! எடுத்துக்கொண்டு போங்கள்!!' என்று, நகீப் தந்திருக்கிறார்.

சம்பவம், கெய்ரோவில் டிச 30-ந் தேதி நடைபெற்றிருக்கிறது.

படத்தைப் பெற்றுக்கொண்ட பண்டிதரின் சகோதரி, 'உயர்ந்த பரிசு, இது!' என்று உரைத்தாராம். உலக நாடுகளை, நினைத்த போதெல்லாம் அரசுத் தூதுவராகச் சுற்றிப் பார்த்து வரும் 'பாக்யம்' உள்ள, தேவியார் பெற்ற 'உயர்ந்த பரிசினை' அறிய, ஆவல்கொள்வீர்கள். அலெக்சாண்டிரியாவின் அழகைச்சித்தரிப்பதோ, நைல்நதிக் காட்சியோ, பரூக் மன்னனின் படாடோபங்களில் ஒன்றாக இருந்ததோ, என்று நினைப்பீர்கள். அல்ல! அல்ல!! நகீப், அளித்தது—ஒரு ஓவியம்! அதுவும், அழகு நிரம்பியதல்ல; வர்ணங் கூட்டி, கண்ணை மயக்கும் ஓவியமல்ல. எனினும், விஜயலட்சுமி ஆர்வத்தோடு பார்க்க, அதனை வழங்கியிருக்கிறார், நகீப். பெற்றுக்கொண்ட தேவியார், 'சிறந்த வெகுமதி' எனச் செப்பியிருக்கிறார்.

விஜயலட்சுமியாருக்குக்கிடைத்த அந்தப் படம், தளபதி நகீப்பினுடையது!—அதனைத் தான், 'சிறந்த வெகுமதி' என்று குறிப்பிட்டுள்ளார்கள், அம்மையார். இருளும் சூதும் சூழ்ந்துகிடக்க, இறுமாப்புமிக்கவனான ஒருவன் கையில் சிக்கிச்சிதைய, வேதனையும் பஞ்சமும் அரசோச்சிக் கிடந்த, எகிப்து மண்ணிலே, ஒளிவீசச் செய்த ஒரு தளபதியின் ஓவியம். உலகத்தால் புகழ்ப்படும் நேருவின் தங்கையால் சிறந்த வெகுமதி' எனப் பாராட்டப்பட்டது, போற்றக்கூடிய நிகழ்ச்சி தான்.

நாடாளும் புரவலன், மற்றோர் நாட்டு விருந்தினருக்கு வழங்கும் பரிசு வகையினைச் சேர்ந்ததல்ல, இது. அந்நியன் கையிலிருந்து நாட்டைமீட்டு ஆளும் ஒருவரின் தங்கைக்கு, சொந்த நாட்டுக்குத் துரோகம் இழைத்தோனைத் துரவிரட்டிய வீரன் ஒருவன் அளித்த பரிசு; அத்தகைய பரிசு எப்படியிருக்கும்? அதிலும், அண்மையில் தான் அரசுப் பொறுப்பையேற்றவர் நகீப்; அதுவும், எகிப்து பூமியின் ஏகதலைவனாக! அவர், அயல் நாட்டுக்கு அனுப்பும் படத்தில், எத்தகைய காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கும்? 'இதோ! எகிப்து மன்னன் பரூக். கடற்தளத்திலே நின்றபடி, கலங்குகிறான்—காதலியோடு. கலம், புறப்படுகிறது, தாயகத்தினின்றும் அத்தடித்த உருவத்தை ஏற்றிய வண்ணம். மிடிமை போயிற்று என்று மக்கள் மகிழ்கிறார்கள்! தம்மை வாட்டி வதைத்த மன்னவனை விரட்டிய மாவீரனை நோக்கி ஓடிவருகிறார்கள்—அவன் மகிழ்ச்சியோடு பார்க்கிறான். வாழ்க தளபதி! வாழ்க மாவீரன்!!—என்ற முழக்கங்கள், அவனது காதுகளில் மோத, களிப்போடு பார்க்கிறான். இவ்விதம் சித்தரிக்கப்பட்ட, படம் தானே வரையப்பட்டிருக்கும்—தளபதியின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்—தேவியாருக்கும் வழங்கப்பட்டிருக்கும். புதிதாக விடுதலை பெற்ற வீரனின் உள்ளம், தன்புகழ் தாரணியெங்கும் பரவவேண்டுமென்ற விருப்பத்தினால், இவ்விதக் காட்சியொன்றை 'எடுத்துச்செல்லுமாறு' தருவது — தவறுமல்ல; வீண் விளம்பரமுமல்ல. ஆனால், தளபதி தந்தபடம், இந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல!—இவ்விதப் படம் அளிக்கப்பட்டிருந்தால், இந்தப் பரிசுச் சம்பவம், நமது உள்ளத்தைக் கவர்ந்திருக்காது. சராசரி சம்பவங்களில் ஒன்றாகப் போயிருக்கும். தனது வீரப் பிரதாபங்களையோ, வெற்றிக் காட்சிகளையோ விளக்கும் சித்திரத்தைத் தரவில்லை நகீப்! சாதாரண ஓவியம்—'ஓவியம்' என்றும் கூறமுடியாது; ஏனெனில் அதற்குரிய இலட்சணங்கள் இல்லாதது. அதனை அளித்திருக்கிறார்! அதன் மூலம், 'அவரை' நமக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்!!

சாதாரணபடம் - ஆனால், அது ஒரு வீரனின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது, உலகுக்கு.

“ஒருபடம், எப்படி உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்ட முடியும்?” — என்று கேட்கத் தோன்றலாம். உண்மை! உள்ளத்தை மட்டுமல்ல, 'எழுதாக் கடிதத்தையும்' அனுப்பியிருக்கிறது, பண்டிதருக்கு. ஆம், அது ஓர் 'எழுதாத கடிதம்' பண்டிதருக்கு! அதனை, அவர் உற்றுநோக்கினால், கடிதமாக மட்டுமல்ல, 'பொதுவாழ்வுக்கோர் அகராதி' யாகவும் காட்சியளிக்கக் கூடும். அவ்வளவு, சிறப்பு மிக்கது! இல்லாவிடில், உலகம் சுற்றும் அம்மை 'அருமையான பரிசு' என்று செப்புவாரா.?

தளபதி நகீப்-இன்று உலக அரங்கத்திலே, ஒளிவிடும், ஒரு சுடர். அவரைப் பற்றி, கடந்த ஆண்டு, எவரும் அறியார்-அவரது நாட்டில் கூட 'அவர் ஓர் படைத் தலைவர்' என்றளவுக்குத்தான் தெரியும். அத்தகைய ஒரு ஆசாமி, சில மாதங்களுக்குள் உலகத் திரையில் ஒரு ஓவியமாகத் தீட்டப்பட்டுவிட்டார்! ஒருநாள் நிகழ்ச்சி. உலகக் கண்களை, அவர்மீது, திருப்பி விட்டுவிட்டது. அத்தகைய வீரத் தளபதி, வழங்கினர் தன் படத்தை! அந்தப் படத்தில் அவர் இருக்கும்விதம்,எப்படித் தெரியுமா?

தோளில் ஓர் துப்பாக்கி! — ஆம், அவர் போர்வீரனல்லவா-இருக்கத் தானேயிருக்கும்என்பீர்கள். அதில் ஒன்றும் விசேஷமில்லைதான்! துப்பாக்கியால்தான், துவண்டுபோன நாட்டை மீட்டார். ஆகவே, அவர் தோளில் துப்பாக்கி ஏந்தி நிற்பது ஆச்சரியமல்ல. அத்தகைய ஓர் 'படம்', பிரமாதமான பரிசுமல்ல—எங்கங்கோ பார்க்கலாம்-அவருக்குக் கீழ் பணி புரிந்த போர் வீரர்களின் இல்லங்களில் கூட இருக்கலாம். ஆகவே, தோளில் துப்பாக்கியுடன் இருப்பது, ஒன்றும் அருமையல்ல.

ஆனால், கையில் அவர் ஏந்தியிருப்பதாக அந்தப் படத்தில் தீட்டப்பட்டிருந்ததே, அதுதான் நம்மைக் கவர்கிறது-தேவியாரையும் கவர்ந்திருக்கிறது. மாவீரன் தளபதி, மண்டிலத்தின் சுகங்களையெல்லாம் மாளிகை அறையொன்றில் அனுபவித்த மன்னன் பரூக்கைக் கண்ணீரோடு கப்பலேற்றிய விடுதலைவீரன், தோளில் துப்பாக்கியேந்தியிருப்பதாகக் குறிப்பிட்ட அந்தப் படம், அவன் கைகளில் வைத்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது, எது, தெரியுமா? ஒரு நீண்ட துடைப்பக்கட்டை! ஆம், வீடு கூட்டும் விளக்குமாறு, கையில். அதனால்தான், கவர்ந்தது என்றோம். துப்பாக்கி ஏந்திய கை. இன்று துடைப்பம் ஏந்துகிறது! மாவீரன், அவன்! ஆனால் அவன் கை மணிமுடிகளைத் தடவி, அதில் பதிந்திருக்கும் இரத்தினங்களையும் வைரங்களையும் கணக்கெடுப்பதாக சித்திரத்தில் இல்லை. ஒரு துடைப்பக்கட்டையை ஏந்தி நிற்கிறான்!

தோளில் துப்பாக்கி! கையில் துடைப்பக்கட்டை!!—இப்படி ஒரு படம். அதுவும், எங்கே, தெரியுமா இருந்தது? அவரது அறைக்குள்! அரசாங்க அறைக்குள்!! எகிப்தின் தலைவன் என்பதால், அவரைக் காண அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வரக்கூடிய இடம்-அமைச்சர்கள் ஆலோசனை கேட்க வரலாம்-புது ஆட்சி, என்பதால் புதுப்புது மிரட்டுதல்களோடு லாபவேட்டைக்காரர்கள் வரலாம்-கைலாகு பெறவும், பாராட்டவும் பலர் வரக்கூடும். அத்தகைய அறைக்குள், இவ்விதம் ஓர் ஓவியம்! அதுவும் தன்னுடைய ஓவியம்!! தோளில் துப்பாக்கியும் கையில் விளக்குமாறும் வைத்திருப்பதுபோல, ஓவியம்.

அதனைத்தான், அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார், அம்மையாருக்கு. அவரும் 'அருமையான பரிசு'! என்று, அகமகிழ்ந்திருக்கிறார்கள். உண்மையில் விஜயலட்சுமியார் மட்டுமல்ல, அரசியலில் கொடுமைகள் களையப்பட வேண்டுமெனக் கருதும் எவரும், அதனை ஓர் 'அருமையான படம்' என்றே, கூறுவர்.

'நான், நாட்டின் தளபதி!—இதோ பார், துப்பாக்கி. இதனால், என்னை, துப்பாக்கிமட்டுமேதூக்கத் தெரிந்த வீரன் என்றெண்ணிடாதே. எங்கெங்கு நாசம் அழுக்கும் படிந்துள்ளதோ, அவைகளையும் துடைப்பேன், அதற்குத்தான் இந்தத் துடைப்பம்! 'சாக்கடை' யென்பது — வீட்டில் கழுவப்படும் நீரால் நிரப்பப்படுவதுபோல, நாட்டின் வாழ்க்கையிலும் 'சாக்கடை' கள் உண்டு. இங்கே கிடைக்கும் லாபவேட்டைக் கொசுக்களை எனக்குத் தெரியும்! தடித்துப் புரளும் புழுக்களாம் நிலப்பிரபுக்களை அறிவேன், நான்!! அதனால்தான், துடைப்பமும் ஏந்தியிருக்கிறேன். கேடுவிளைவிக்கும் அந்த 'கித்தாப்பு'க் காரர்களை, இதனால் துடைப்பேன்” என்று சொல்லாமற் சொல்லும், சித்திரமாகத் தன்னைத் தீட்டிக் கொண்டிருக்கிறார், தளபதி நகீப். அதனைப்பலர் வந்து சந்திக்கும் அறையிலும் மாட்டிவைத்திருக்கிறார்—வருவோர் போவோருக்கு எச்சரிக்கவும்,கடமையுள்ளங்கொண்டோரின் பொறுப்பை ஞாபகமூட்டவும்.

அத்தகைய படத்தைத்தான், அவர் வழங்கியிருக்கிறார்! அதனைப் பெற்றுக்கொண்ட அம்மையாரும் 'அருமையானபரிசு என்று கூறியிருக்கிறார். ஆனால், துடைப்பம் தாங்கிநிற்கும் தன்னுடைய படத்தை, பண்டிதரின் தங்கைக்குத்தர அவர் முன்வந்தது ஏன்?—இந்தக் கேள்வியை 'அருமையானது' என்று பாராட்டிய, தேவியார், நினைத்திருக்கமாட்டார். படம்,அருமை—இதுதான் அவர், கூறியது. ஆனால், அதனைத்தந்த நகீப் என்ன நினைத்துக்கொண்டு அளித்திருப்பார்?

“அம்மையே! போனதும் உன் அண்ணனிடம் காட்டுவாய், இப்படத்தை. நகீப்—துப்பாக்கி மட்டும் ஏந்தியிருக்கவில்லை — துடைப்பமும் தாங்கியிருக்கிறான். எதிரிகளை வீழ்த்தி புது அரசைஸ்தாபிப்பதுமட்டுமல்ல! மக்களைப் பீடிக்கும் சமுதாயக் கொடுமைகளையும் துடைக்கிறான்!! வந்ததும், உலகத்தை அரிக்கும், நிலப்பிரபுக்களை அடக்கினேன்-நிலத்தைப் பங்கிட்டு

(4-ம் பக்கம் பார்க்க)


திராவிடநாடு

**பொங்கல் மலர்**

★

* இதுவரை வந்த 'மலர்'களை, இது மிஞ்சிவிடும்
* ஓவிய விருந்து! அறிவுப் படைப்பல்கள்!!
* சிறந்த கட்டுரைகள்—அறிவுக் குவியல்கள்
* பொங்கலன்று —:அருமையான சிந்தனை விருந்து.
* வாங்குவோர், அகமும் உளமும் களிக்கத்தக்கவகையில் தயாராகிறது.

சி. என். ஏ.
தீட்டும்
ரொட்டித்துண்டு—கதை
தஞ்சை வீழ்ச்சி—சரித சித்திரம்
பொன்னொளி—
ஆரியப் புரட்டினை
விளக்கும் கட்டுரை

மற்றும் பல,
சிந்தனை விருந்துகளோடு
*
மு. கருணாநிதி
நெடுஞ்செழியன்
மதியழகன்
சம்பத்
இரா. செழியன்
ப. வாணன்
வில்லாளன்
கண்ணதாசன்
கதிரன்
எழுத்தோவியங்களோடு.

**எல்லோர் கையிலும் இருக்கவேண்டிய மலர்**

விலை ரூபாய் 1

# "சொந்தமிகு சகோதரிகாள்! அந் தோழர்களே! பெரியோர்களே! துன்பமடைந்தவர் இன்புற செய்யவேண்டும் நீங்களே!!"

திராவிட நாடு

காஞ்சி] 4—1—53 [ஞாயிறு

## ★ கைத்தறி நெசவுச் சே-வேட்டிகள் வாங்குவீர்! ★

## 'அனுதாபம்' போதாது!

★

"நெசவாளர் கஷ்டத்தைக் கண்களால் கண்டேன் — மனம் உருகி விட்டேன். என்மாதிரி இதர மக்களும் உணரவேண்டும்.

நெசவாளர்களின் நிலை மிகவும் பரிதாபம். அவர்கள்துயரைத்தீர்க்க வேண்டுமானால் அவர்களிடையே உள்ள துணியை நாட்டு மக்கள் வாங்கவேண்டும். அதிக விலையானாலும் பாதகமில்லை. கஞ்சி கொடுப்பதாலும், ரொக்கம் கொடுப்பதாலும் கஷ்டம் தீர்ந்துவிடாது. தறி மீண்டும் இயங்கச் செய்வது — நமது கடமை.

துணிகள் தேங்கியதுதான் அவர்களது துயரங்களுக்குக் காரணம். அதற்காகக் கைத்தறித் துணியை வாங்கவேண்டும்.

தருமமாகக் கஞ்சி தருவது மக்களின் உறுதியையும், உடலையும் பாதிக்கும். அவர்கள் தொழில்மீண்டும் நடக்கவேண்டும்.

நான் ஒரு நெசவாளர்பெண்ணைச் சந்தித்தேன். வீட்டில் அடுப்பே, மூட்டுவதில்லை, பட்டினி கிடக்கிறோம் என்று கூறினாள். என் மனம் மிகவும் கஷ்டப்பட்டது"

*

'புலி புலம்பியிருக்கிறது, இவ்விதம்! இரத்தம் குடிக்கும் 'புலி'யென காம் வர்ணிக்கும் 'டில்லி'பீடத்திலே அமர்ந்திருப்பவர் இவ்விதம் வெளியிட்டுள்ளார்! சென்னைக்கு வந்து சேலம் சென்று திரும்பிய கட்ஜூ, இந்த வாசகங்களை, வெளியிட்டுள்ளார். கண்களால் கண்டேன்! மனம் உருகினேன்!!என்று. கூறுகிறார். மகிழ்ச்சி. மந்திரி வந்தார்! கண்களால் கண்டதோடு போகாமல், மனமும் உருகினார், என்பதால். இந்த மகிழ்ச்சியை, தோழர் கட்ஜூ உலரச் செய்து விடமாட்டார் என நம்புகிறோம். ஏனெனில், இவர் பண்டித நேருவின் சிறந்த நண்பர்களில் ஒருவர்—உள்நாட்டு மந்திரி. ஆகவே, தனது சகாக்களிடம் நிலைமையை விளக்கி தென்னாட்டு நெசவாளர்களுக்கு 'நீதி' வழங்குமாறு செய்யவேண்டும்.

இதயம் துடித்தேன்!—என்கிறார், கட்ஜூ. இந்த 'இதயம் துடிக்கும்' நிலை, மக்களைவிட மந்திரிமார்களுக்கு இருக்கவேண்டியவதசியம். 'இது' இல்லாததால்தான், கடந்த ஐந்தாண்டுகளில், நாடு காடாகிவருகிறது ஆனல், 'புலி'யின் பீடத்திலே வீற்றிருந்தாலும், மனதிரங்கும் சுபாவம், தோழர் கட்ஜூவுக்கு இருக்கிறது. மகிழ்ச்சி, மகிழ்ச்சி. அவர் வெளியிட்டுள்ள, ஆலோசனைகளையும் வரவேற்கிறோம் — அவர் குறிப்பிடும் "கைத்தறித் துணிகளை வாங்குவீர்!" என்கிற நற்பணிக்காகத்தான் 'ஜன 4' நடத்தப்படுகிறது. கண்ணால்கண்டு, இதயம் துடித்து,மனம் உருகி, அதனால் ஆலோசனையும் தந்திருக்கும் அன்பர் கட்ஜூ, டில்லிக்குச் சென்றதும் தனது சகாக்களைக் கலந்து, 'கைத்தறித் துணி தேங்காமற்செய்ய உடனே ஒரு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென எதிர்பார்க்கிறோம். "வேட்டிகளையும்—சேலைகளையும் மில்கள் தயாரிக்கக்

(4-ம் பக்கம் பார்க்க)

## பொது வாழ்க்கையில் ஒரு புதுப் பணி, தி. மு. க. செய்யும் திருப்பணி!

### திருச்சி

காலை 9 மணிக்கு கழக நிலையத்திலிருந்து, பொதுச் செயலாளர் அண்ணாதுரையும் தோழர்கள் அ. பொன்னம்பலனார், இசைமுரசு ஹனிபா, தில்லை-வில்லாளன், ஜி. பராங்குசம், எம். எஸ். மணி, ஏ.பி. தர்மலிங்கம். ஆகியோர் கைத்தறித் துணிகளை எடுத்துக்கொண்டு. பல வீதிகளில் வீடு வீடாகச் சென்று, பிற்பகல் 3 மணிவரை விற்பனை செய்வார்கள்.

ஊர்வலம்: மாலை மணி 5-க்கு ஐ. எம். ஷரீப் தலைமையில் வன்னிமாத்தடியிலிருந்து ஆதரவு ஊர்வலம் புறப்பட்டு சவுக், பெரியகடை வீதி, மணிக்கூண்டு, மேலப்புலிவார்டு ரோடு, சைனபசார்,வழியாக டவுன்ஹாலை அடையும். ஊர்வலத்தில, ஆங்காங்கு தோழர் ஹனிபா. கைத்தறியாளர் ஆதரவுப் பாடல்களைப் பாடுவார்.

பொதுக்கூட்டம்:- டவுன்ஹால் முன் நடைபெறும். நெசவாளர் ஆதரவுநாள் கூட்டத்துக்கு ஜி. சுப்பையா B. A., B. L., தலைமை வகிப்பார். பொதுச்செயலாளர் அண்ணாதுரையும் தோழர்கள் பொன்னம்பலனார், வில்லாளன், மற்றும் பலர் பேசுவர். ஹனீபா பாடுவார்.

### சென்னை

மு. கருணாநிதி. சே. எம். கண்ணபிரான் கே. ஆர். செல்லமுத்து ஆகியோர், சென்னையில் பலபாகங்களிலும், கழகத் தோழர்களோடு சென்று, கைத்தறி விற்பனையிலீடுபடுவார்கள். ஆங்காங்கு கே. ஆர் செல்லமுத்து பாடுவார். மாலையில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

### கோவை

ஈ. வி.கே. சம்பத், எஸ். அப்பாவு எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியோரும் கழகத் தோழர்களும் நகர முழுமையுமுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, கைத்தறித்துணிவிற்பனையிலீடுபடுவார்கள்.

### தஞ்சை

கே. கே. நீலமேகம், டி. கே. சீனுவாசன், எ. வி. பதி, எஸ். கே. சாமி, நடராசன் ஆகியோர் நெசவாளர் துயர் தீர்க்கும், விற்பனையில் ஈடுபடுவார்கள்.

### சிதம்பரம்

அரங்கண்ணல், கே. டி. எஸ். மணி, பாலகுருசாமி ஆகியோர் நகரின் பல பாகங்களிலும் அண்ணாமலை நகரிலும் சென்று, கைத்தறி விற்பனையிலீடுபடுவார்கள்.

### காஞ்சிபுரம்

நடிப்புப்புலவர் கே.ஆர். ராமசமி, சி. டி. டி. அரசு, ஈழத்து அடிகள், சி. வி. எம். அண்ணாமலை (எம். சி.) டி. சபாபதி, சே. கோ. பெருமாள் (எம். சி.) ஆகியோர், கீழ்க்கண்ட திட்டப்படி, கைத்தறித்துணி விற்பனையிலீடுபடுவார்கள்.

இவ்வட்டார எம். எல். ஏ. தோழர் எஸ். தெய்வசிகாமணியும் விற்பனையிலீடுபடுவார்.

காலை 7 மணிக்கு—சின்னகாஞ்சிபுரம் அண்ணா வீட்டுக்கருகிலிருந்து விற்பனைக்குச் செல்வோர் புறப்படுவார்கள்.

அங்கிருந்து, வாருவாசல் தெரு வடவண்டைமாடவீதி, திருச்சோலைந்தெரு, பட்டாளத் தெரு, டோல்கேட், யாதவத் தெரு, அம்மங்காரத் தெரு, வேகவதி தெரு, ஆனைகட்டித் தெரு, மலையாளத் தெரு, சுண்ணாம்புக்காரத் தெரு, திருகச்சிநம்பித தெரு, விளக்கடி கோயில் தெரு, ஏளத்தீஸ்வரன் கோயில் தெரு, காவலந் தெரு, கரிக்கினிலமர்ந்தவள் தெரு, ராஜாம் பேட்டைத் தெரு, மடம் தெரு, மண்டபத் தெரு, புதுப்பாளையத் தெரு, கிருஷ்ணாயர் தெரு, அக்கணம்பாளையத் தெரு, மாகாளி அம்மன் தெரு, நடுத் தெரு, ஐயினார்கோயில் தெரு, ஒதியடிமேடை, புத்தேரித் தெரு, ராச வீதி ஆகிய தெருக்களுக்குச் சென்று, மீணடும் பிற்பகலுககுமேல், கங்கைகொண்டான்மண்டபம் செங்கழுநீர்ஓடை கிழண்டை ராஜவீதி, நெல்லுக்காரத் தெரு, இரட்டைமண்டபம், குலாளர் வீதி, ராசம்பேட்டை தெரு, ஆடிசன்பேட்டை, சங்கூசா பேட்டை, சேக்குப்பேட்டை, சாவடித் தெரு, ரயில்வேரோடு, ரெட்டிப்பேட்டை ஆகிய இடங்களுக்குச் சென்று, விற்பனையிலீடுபடுவார்கள். ஆங்காங்கு கைத்தறித்துணிகளை ஆதரிக்கும், பாடல்களை நடிடபுப் புலவர் கே. ஆர். ராமசாமி பாடுவார். கிளைக்கழகத் தோழர்களும், முனிசிபல் கவுன்சிலர்களும் ஒத்துழைப்பார்கள். மாலை—ஆடிசன்பேட்டையில் நகர தி. மு. க. செயலாளர் வி. என்-மார்க்தலைமையில்,கே. ஆர்-ராமசாமி, எஸ். தெய்வசிகாமணி பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., சி. டி டி. அரசு, சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

### மாயவரம்

மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார், ஆர். பழனிச்சாமி, என். கிட்டப்பா, ஆர். இராமானுசம். வி. சக்கையன், டி. காசிநாதன், எஸ். செல்வராஜ், கே. எஸ். சௌந்தராசன், மா. செங்குட்டுவன், ஆகியோர் கைத்தறித்துணிகளை வீதி வீதியாகச் சென்று விற்பனை செய்வார்கள்.

மாலையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை ஆகியோர் கலந்து கொள்ளலாம்.

### நெல்லிக்குப்பம்

இரெ. இளம்வழுதி எம். ஏ., பி. எல். தலைமையில் துரை, அப்பாஜி, ரஹீம், சோழன், இரா. மதியழகன், பி. பொன்னுச்சாமி, எ. வி. தண்டபாணி, இர. தேவநாதன், எ. பி. சந்தர், எ. வைத்திலிங்கம், அ. தங்கராசு, நா. சுகுணசங்கரன், ச. இளந்திரையன், அ. வெங்கடபதி, ச. இராசகோபால், ச. இளவழகன் ஆகியோர் விற்பனை செய்வர்.

மாலை திரௌபதியம்மன் திடலில் இரெ. இளம்வழுதி மற்றும் பலர் பேசுவர்.

### காரைக்குடி

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. தலைமையில் கண்ணதாசன், இராம. சுப்பையா, வெள்ளையன் ஆகியோர் ஊர் முழுமையும் கழகத் தோழர்களோடு சென்று கைத்தறித்துணிகளை விற்பனை செய்வார்கள்.

### திருமங்கலம்

இரா. சு. தங்கப்பழம், கு. ப. ம. தர்மன்

### நாகர்கோயில்

என். எஸ். இளங்கோவும் கழகத் தோழர்களும்

### ராமநாதபுரம்

சௌந்தரபாண்டியனும் கழகத் தோழர்களும்

### விருதுநகர்

எ. கே. வேலனும் கழகத்தோழர்களும்

### அருப்புக்கோட்டை

ஏ. வி. பி. ஆசைத்தம்பியும் கழகத்தோழர்களும்.

### அம்பாசமுத்திரம்

வீரபாகும் கழகத்தவரும்.

### தூத்துக்குடி

என். வி. நடராசன், கழகத் தோழர்களோடு ஊர் முழுமையும் சென்று, நெசவுத்துணிகளை விற்பனை செய்வார்.

### மேலப்பழுவூர்

கழகத்தின் சார்பில், கீழ்க்கண்ட கிராமங்கள்தோறும் சென்று கீழ் குறிப்பிடப்படும் தோழர்கள், கைத்தறித்துணிகளை விற்பர்:

கிராமங்கள்:—மரவனூர், மேத்தாள், ஆத்தூர், சில்லக்குடி, மளத்தாகுளம், சுத்தமல்லி, பூண்டி, சோக்குடி, ஆங்கனூர், வெங்கனூர்.

கல்ந்து கொள்வோர்:—கே. சுந்தரராசன், எ. செல்லமுத்து, ஆர். சுந்தரராசன், ஆர். வீரன், எம். மாரிமுத்து, ஈசுப்பு, கே. செம்புலிங்கம், எ. விருந்தாசலம், சி. ராமசாமி, சி. நடேசன், என். பெரிடசாமி.

### பவானி—குமாரபாளையம்

எஸ். எஸ். எம். சுப்பரமணியம், ச. வே. ர. கண்ணன், ஜீ. ராசகோபால், நா. இரகுராமன், வெ. கு. சோ. தனக்கோட்டி

## ஜன 4 :: கைத்[...]ர் ஆதரவு நாள்

உலகில், அரசியல் வாதிகள், [...]மித்தம் 'வியாபாரி'களாக மாறுவதேன்பது, அரசியல் சரித்திரம் காணாத புதுமை[...]

தாங்கள் வாழும் சமுதாயத்தில் [...]ண்ணீர் துடைக்க, திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் 'புது வழி'யைக் காட்டுகிற[...]

திராவிட முன்னேற்றக் கழகத்[...]டுமல்ல. போதுக்குழு உறுப்பினர்கள்—அதன் முன்னணி பிரச்சாரகர்கள்—அதன் பொது[...], நேரடியாக இந்தப் புதுமைப் பணியில் ஈடுபடுகிறார்கள்.

புதுப் பணி, இது'—ஆனால், ஒரு[...] வேதனையையும் அது உண்டானதன் வகையையும் விளக்குவது. ஆள்கிறது, அர[...]கமாம், அதற்குப்பெயர். ஒரு 'உத்தரவு' மூலம் அது செய்யவேண்டிய காரியத்தை, [...] செய்யவேண்டியதாகயிருக்கிறது. 'ஆலை உடைகளை அனுமதியோம்!'—போதும், இ[...] 'அதிகாரம்' டில்லியிடம். ஆகவே, விழிக்கிறது, மாகாண சர்க்கார்! வேதனைப்படும் [...]டைக்க, மக்களின் ஒரு பகுதியினரான நாம் புறப்படுகிறோம்! இந்தப் பணி—மனி[...] இதனை வெற்றிகரமாக்கித் தருமாறு, வேண்டிக் கொள்கிறோம்—வீர மரபினரின் வழி வ[...]ரியங்களைத் தள்ளி, கை கொடுக்கக் கோருகிறோம்—கைத்தரியாளர்களுக்கு.

வாவ[...]

இ[...]மையில் நாலை [...]-வரை நா. [...]ந்திரங் கன், [...]காவிந் தசமி[...]ன், சி. ஜான[...]ருஷ்ண சாமி, [...] துணி களை [...]

மோக[...]

க. [...], பி. கே. [...] குரு சாமி[...]

செங்[...]

கே[...]மன். ஜே. [...]னிபு (முனி[...]ம். வி. எத்தி[...] தன சேகர[...], எ. வேத[...] ஆகி யோர்[...]த்தறித் துணி[...]ப்வர்.

வடக்[...]

வே[...]த்தாப் பிள்[...]ாசன்.

அம்பா[...]

கே[...]ிக்கம், ஆறு[...]

கச்சிரா[...]

க [...]. என். ராம[...], எ. நல்லா[...]

மாந்து[...]

செ[...]மி, ஜி. ராமசா[...]அன்று மாலை [...]ணிக் கம் த[...], நல் லாப்பி[...] ஆகி யோர்[...]

உங்கள் கரு[...]கொள்ள.
தமிழகத்தின்[...]தை விளக்க,
தவிக்கும் த[...]வு தர,
கைத்தறித் [...]ங்கள்!
இந்த ஆண்[...]வை,
இந்த நற்கா[...]
நாம் கொண்[...]

### திண்டுக்கல்

எஸ். வி. தொந்தி (மதுரை மா. வ. செய), எஸ். முத்து, க. வே. விக்ரமாதித்தன், பி. சம்தர்மம், என். முத்து ஆகியோர், கைத்தறியாளர் ஆதரவு நாளில் பங்கு கொள்வார்கள்.

பொதுக்கூட்டம்:— மாலை மணி 5-க்கு வ. உ. சி. திடலில் கைத்தறியாளர் பிரச்னை குறித்து, பொதுக் கூட்டம் நடைபெறும்.

### ஆம்பூர்

கவுன்சிலர் ஈ. எம். கிருஷ்ணையா தலைமைபில தோழர்கள் பலர்,கைத்தறித் துணிகளை விற்பனை செய்வார்கள்.

### மணப்பாறை

. ச. சமுத்திரபாண்டியன், மீ. சு. இளமுருகுபொருட்செல்வி, எ.எஸ். கணபதி, என். வடிவேல், வி. எஸ். கே. வேலன்.

### தேவபாண்டலம்

தி.மு.க. தோழர்கள் கீழ்க்கண்ட விவரப்படி, அன்று, விற்பனை செய்வார்கள்.

ஆலத்தூர், சிறுவங்கூர், அரியபெருமானூர், கோமாண்டார்குடி கள்ளக்குரிச்சி. டி. பி. கேசவன், வி. செவத்தான், பி. எஸ். சி. கண்ணன்.

வடசிறுவனூர், மஞ்சத்தூர், பழையனூர், இராமநாதபுரம், வளையாம்பட்டு, விரியூர், ஆரூர்.

உலகுடையாம்பட்டு. மூக்கலூர், இராவுத்தநல்லூர், பிர்மகுண்டம், கடுவனூர், அத்தியூர். கே. தனக்கோடி, என். நச்சியப்பன், எஸ். பெரியசாமி, பி. கண்ணன்.

சங்கராபுரம், செம்பராம்பட்டு, நெடுமானூர், பூட்டை, சோழம்பட்டு, அரசம்பட்டு. பி. நாராயணன், வி. பழனி, வி. கருப்பன், அகமத் ஷரீட, எம் வேலாயுதம்.

### சின்னசேலம்

பி. எஸ் எம். சவுடையா, எஸ். சேதுபதி, ப. தியாகராஜன், எல். ஆர். கந்தசாமி, என். திருமேனி, எஸ்.பி.எஸ். ராமையா, எஸ். டி. தாஸ். ஆகியோர் விற்பனை செய்வார்கள்

## நாடெங்கும், நலிந்தோர் வாழ்வுயர நடைபெறும் 'ஜன 4' விபரங்கள்

சுற்றுப்புறக் கிராமங்களில் ப. ஜெயராம், சு. காமாட்சி, கே. எஸ். பி. பொன்னம்பலம், ந. சதாசிவம். ஆகியோர் சென்று விற்பனை செய்வார்கள்.

மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில் பொதுக்கூட்டம்நடைபெறும்.

### கடம்பூர்

எம். எஸ். பி. சாமி, பு. பொன்னுச்சாமி, வே. மு. சின்னமணி. ஆகியோர் காலையில் ஊர்வலமாகப் புறப்பட்டு, விற்பனையிலீடுபடுவார்கள்.

### வல்லவராயன்பட்டி:

வல்லராயன்பட்டி, சிந்தலைச்சேரி, தேவாரம், பண்ணைப்புரம் ஆகிய ஊர்களில் கைத்தறியாளர் ஆதரவு நாளில் ஈடுபடும் தோழர்கள்:

செ. கரிகாலன் ரா. மூக்கையா ஏ. பி. முத்துவெள்ளை, எஸ். கே. அழகர், மு. நடராசன்.

### பாளையங்கோட்டை:

எம். எஸ். சிவசாமி, சிவகை கந்தசாமி, எஸ். செய்சன், ந. சங்கரன் பி. செய்யது, கோ. அருணசலம் மீ. கிருட்டினன், அ. நாராயணன் பொதுநலச் செல்வன். ஆகியோர், பாளையங்கோட்டை முழுமையும் கைத்தறித்துணி விற்பனையிலீடுபடுவர்.

பொதுக்கூட்டம்:-ஆயிரத்தம்மன் கோவில் முன்பு நடைபெறும் எம். எஸ். சிவசாமியும் பலரும் பேசுவர்.

### குமாரகுப்பம்:

அ. வரதராசு, வா. கதிர்வேல் டி. என். செயராமன். ஜி. விஸ்வநாதம், எம். கிருஷ்ணன், ஆங்காங்கு கைத்தறித்துணிகளை விற்பர்.

### திருவையாறு

துரை, வையாபுரி, என். சிங்காரவேலன், தோழியர் டி. பி. என். இராசம் அம்மையார், ஆர். எஸ். மணி ஆகியோர்.

பொதுக்கூட்டம்:—மாலை 5 மணிக்கு துவங்கும். ஆர். எஸ். மணி, இராசம் அம்மை, பி. ஆர். ராசன் பேசுவர்.

### இராஜபாளையம்

கோ. சந்தரன் தலைமையில் ஆதரவு நாள் கொண்டாடப்படும். கழகத் தோழர்கள் பங்கு கொள்வார்கள்.

### அம்மையப்பன்

கோ. தங்கவேலு, வே. சோமசுந்திரம். வெ. ரங்கராசு, பி. ராமதாஸ், என். சுவாமிநாதன், ப. ஜெயசந்திரன், கோபாலகிருட்டினன், ஆகியோர் கைத்தறித்துணி விற்பனையிலீடுபடுவார்கள்.

### திருப்பூண்டி:

மாரியம்மன் கோவிலுக்கு எதிரில் எஸ். விட்டல் தலைமையில் முனிசிபல் கவுன்சிலர் இராதாமணாளன், கைத்தறியாளர் ஆதரவு நாளையொட்டிப்பேசுவார்.

### ஈரோடு:

காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை பல தெருக்களிலும், வீடு வீடாகச் சென்று தோழியர் சத்தியவாணிமுத்து, நாஞ்சில் மனோகரன் ஆகியோர், கைத்தறித் துணிகளை விற்பனை செய்வர்.

பொதுக்கூட்டம்:—எஸ். ஆர். சந்தானம் தலைமையில் காரைவாய்க்கால் மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து, மனோகரன், இரா. பெருமாள் ஆகியோர் பேசுவர்.

### அக்கரயபாளையம்:

வாதன், ராமசாமி, செல்லம்.

### வெங்கடம்மாப்பேட்டை:

ராசு, நெடுமாறன், பெரியசாமி, நாராயணன்.

### ஏர்வாரப்பட்டணம்:

சகாதேவன், பரமசிவம், வெங்கட்டராமன், நடேசன்.

### திருவன்னூர்:

டி. ஆர். வரதன், எம். ஆர். சந்திரன், ஜி. வீராகவன், சுந்தரராஜ், ஜி, எஸ். பாலசுந்தரம், ஆர். எ. ரஸாக், மதனன், எம்.கே. கோவிந்தசாமி, எல். முருகேசன்.

### தாலிகட்டிப்பாளையம்:

பொ. சின்னப்பன், சு. பழனியப்பன், சி. செல்வம், சி. நடராசன், ப. முருகேசன், கைத்தமலை.

### சேலம்

கே. ஏ. மதியழகன், கோபிராஜூ, ஜி. பி. சோமசுந்தரம், ப. கண்ணன், கே. ஏ. நடராசன், முதலியோர் காலை 9-மணி முதல் கைத்தறித்துணி விற்பனையிலீடுபடுவார்கள். அவர்கள் செல்லும் வழிகளின் விபரம்.

| | |
|---|---|
| காலை 9 மணி — | அரிசிபாளையம்—லாடாகுப்புசெட்டி தெருவு. |
| 9-30 — | அன்னதானப் பட்டி தி. மு. க. |
| 10 — | செவ்வாய்ப் பேட்டை மாரியம்மன் கோவில்-அப்பு செட்டித்தெரு. |
| 10-30 — | வாசகசாலைதெரு. |
| 11 — | கொமாரசாமி பட்டி போஸ்டாபீஸ். |
| 11-30 — | பொன்னமாப்பேட்டை — மாரியம்மன் கோவில் முன்பு. |
| 12 — | அம்மாப்பேட்டை—காந்தி மைதானம். |
| 12-30 — | அம்மாப்பேட்டை—மாரியம்மன்கோவில் செல்வம் சதுக்கம். |
| மாலை 3 மணி— | கிச்சிப்பாளையம்—மாரியம்மன்கோவில் |
| 3-30 — | கல்லாங்குத்து சமுகம். |
| 4 — | குகை மாரியம்மன் கோவில் திருச்சி ரோடு. |

பொதுக்கூட்டம்:- மாலை விக்டோரியா மார்க்கெட்முன் தோழர் கே. ஏ. மதியழகனும் மற்ற கழக வீரர்களும் பேசுவர்.

### மதுரை

தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் பால்ராசு, ராஜமாள் ஆகியோர் மதுரை நகரில் நெசவுத் துணி விற்பனையிலீடுபடுவார்கள். அவர்கள் செல்லும் முக்கிய தெருக்களின் விபரம்:—

| | |
|---|---|
| காலை 8 மணி | நடராசன் படிப்பகம்—தெற்குவாசல். |
| 10 — | கோபா ஓட்டல்முன் மேலவெளிவீதி. |
| 11 — | சிங்காரவேலர் படிப்பகம்—கோரிப்பாளையம். |
| 12 — | மறுமலர்ச்சிக் கழகம்—வடமாசிவீதி. |
| 12-30 — | செல்வம் படிப்பகம்—மீனாட்சி தோப்பு. |
| 1 மணி — | வேலாயுதம் படிப்பகம்—அழகரடி. |
| 2 — | தெனாபிக் ஓட்டல் முன்— டவுன்ஹால் ரோடு. |
| 2-30 — | தமிழ் மன்றம்—மேலமாசிவீதி. |

மாலை மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு கலந்து கொள்வார்.

### வேலூர் (வ ஆ)

காஞ்சி மணிமொழியார் A. L. C கிருஷ்ணசாமி டி. வி. நாராயணசாமி T. C தங்கவேலு ஆகியோருடன் V. R. ஆதிமூலம், M. P. சாரதி தேவராஜ், V. S. இரங்கனாதன், வி. எம்பாலகிருட்டினன், அ கருத்தோவியன், வே. அ. இளஞ்செழியன், ஜி. சிவானந்தம், மோகனவேலு, கோ. கிருட்டினன், எம். கே. துரைசாமி, பி. வேதாந்தம் புருஷோத்தமன்,குருநாதன், குப்புசாமி, கா. அண்ணாமலை, எ.கோபால், வி. சின்னையன் ஆகியோர் காலை 9 மணி முதல் நகரின் பல பாகங்களுக்கும் சென்று கைத்தறித்துணி விற்பனையிலீடுபடுவார்கள்.

### ஜனவரி 4:

### சென்னை நிகழ்ச்சிகள்

தலைமை நிலையத்திலிருந்து—புறப்பட்டு தியாகராயசெட்டி கல்லூரி,

காசிவிசுவநாதர் கோயிலிருந்து மண்ணடி போலீஸ்ஸ்டேஷன்,

சிராமலுநாயுடு பார்க்கிலிருந்து புரக்ரசிற் யூனியன் உயர்நிலைப் பள்ளி,

மயிலைகுளக்கரையிலிருந்து லஸ், இராயபேட்டை போலீஸ்ஸ்டேஷன் முதல் மீர்சாகிப் பேட்டை மார்க்கட்.

பாரகன் டாக்கிஸிலிருந்து ஹாரிஸ் ரோட்,

புரசைமார்க்கட்டிலிருந்து டாணா தெரு,

ஸ்ரீ அங்காளம்மன்கோயில் முதல் சரஸ்வதி டாக்கிஸ்,

பொதுக்கூட்டம்

மாலை 6-மணிக்கு பெரம்பூர் ரயில் நிலையத்திற்கு அருகாமையில் கே. எம். கண்ணபிரான் தலைமையில் கலைஞர். மு. கருணாநிதி, திரு. எ. எஸ். வேலு, என். கே. சாமி, ஆகியோர் பேசுவர். இசைவாணர் சிதம்பரம் ஜெயராமன், இன்னிசை பாடுவார்.

*

### தேனி வழக்கு

28—12—52 மதுரை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டேட் திரு தியாகராச அய்யர் அவர்களின் பெரியகுளம் முகாமில் நடந்தது. குற்றம் சாட்டப்பட்டோர் எல்லோரும் கோர்ட்டில் ஆஜர் ஆகியிருந்தனர். வழக்குவிசாரணை 28-1-53. ஒத்திவைக்கப்பட்டது.

—

2-ம் பக்கத் தொடர்ச்சி

கூடாது'' என்று ஒரு உத்தரவு இட்டால் போதும். இதனைச் செய்வாரா? நம்முடைய கோரிக்கை என்பதற்காகக்கூட அல்ல! நாம் கோரினால், அதிலும் 'பிரிவினை' இருப்பதாகச் சொல்லி, 'நல்லதை' நாசம் செய்ய முயற்சிக்கலாம். ஆகவே, இதனை 'நம்முடைய கோரிக்கை' என்றுகூட எண்ண வேண்டாம். தோழர் கட்ஜூ, ஆச்சாரியார் அவர்களை 'மேதை' 'நுண்ணிய அறிவுபடைத்த தலைவர்' என்றெல்லாம் புகழ்ந்திருக்கிறார். அத்தகைய 'நுண்ணிய அறிவு படைத்த தலைவரது யோசனை இது' என்பதை எண்ணியாவது அவர் இந்த உத்தரவைப் பிறப்பிக்கவேண்டுமென விரும்புகிறோம். காண்பது! இதயம் துடித்ததாகச் செப்புவது! 'இதைச் செய்க' அதைச் செய்தால் அவலநிலை தீரும்' என்று போதிப்பது!—இத்தனையும் சுலபம். இவ்விதமெல்லாம் காங்கிரஸ் அமைச்சர்கள், நாட்டின் நிலையைக் காணாமலும் துடிக்காமலும் ஆலோசனை கூறாமலும், இதுவரை இருந்தார்களே அதுதான் ஆச்சரியமேயொழிய, இன்று கட்ஜூ இவ்விதம் பேசியது ஒன்றும் ஆச்சரியமில்லை. பேசுவது சுலபம்! காணாமலும் பேசாமலும் இருப்பது, 'கபோதிக் குணம்'. கண்டுவிட்டு, பேசிவிட்டு, 'யோசனை' வழங்கிவிட்டு, அந்தக் கொடுமையை நிவர்த்திக்க வேண்டிய காரியங்களைச் செய்யாமற் சென்றுவிடுவது, கடையரின் செயல். கட்ஜூவை நாம் அப்படியெண்ணவில்லை. 'இவ்விதம் நடந்துகொள்வதுதான் அரசியல் தந்திரம்'—என்று கருதும் கூட்டத்திற்கு அப்பாற் பட்டவராகயிருப்பார் என்று நம்புகிறோம். ஆகவே, டில்லி சென்றதும், "வேட்டி சேலைகளை இனி மில்கள், உற்பத்தி செய்யக்கூடாது'' என்று, ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென விழைகிறோம்! செய்வாரா? அல்லது 'துன்பங்களைக் கண்டுவிட்டு', துயரப்படுவதுபோல் பேசிவிட்டுச் செல்வதை, 'ராஜதந்திரம்' என, எண்ணுகிறதே, டில்லி. அந்த ராஜதந்திரப் பாதையில் நடப்பாரா?—பொறுத்துப்பார்ப்போம்.

# கைத்தறியும் காங்கிரஸ் தலைமையும்!

கைத்தறியாளர் பிரச்னை குறித்து—காங்கிரஸ் நண்பர்களோ, கம்யூனிஸ்டுத் தோழர்களோ, எவர் எது செய்ய முன்வந்தாலும்—நாம் பாராட்டுவோம்; மகிழ்வோம்.

உள்ளத் தூய்மையோடு, எல்லாக் கட்சியினரும், இந்த நற்பணியிலீடுபட்டு, நலியும் லட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்றும் வழிவகைகளைச் செய்யவேண்டும் என்பதே—தி. மு. க.வின் ஆசையாகும்.

அதனால்தான், அது சம்பந்தமான எந்த முயற்சி செய்தாலும், நாம் மகிழ்வதும்—பாராட்டுவதும்.

கைத்தறியாளர் சம்பந்தமாக சென்னை சர்க்கார் தீவிரவேகம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது—அந்தத் தீவிரம் காங்கிரஸ் கட்சியிலும் இருப்பதாகப் பேசப்படுகிறது.

'தீவிரம்'—பேசுவதாலும், எழுதுவதாலும், தீர்மானம் போடுவதாலும் உணர்த்தப்படுவதல்ல இந்த முறைகள், அரசியல் விவேகம் என்று வேண்டுமானால் கொள்ளலாமே ஒழிய, துயர் துடைக்கும் நல்லெண்ணத்தின் விளைவு என்று எவரும் நம்பார்.

சொல்வது சுலபம்—செயலில் காட்டுவது சிரமம்.

கைத்தறியாளர் சம்பந்தமாக காங்கிரஸ் தலைமையினர் 'வாய்ச் சொல் வீரர்'களாகவே இருக்கிறார்கள்—என்று பலர் கூறுவது, தெரியும் நமக்கு. அதனை உறுதிப்படுத்தும் வகையில், இதோ ஓர் கடிதம். தீட்டியவர், தி. மு. க அல்ல; தோழர் பிரகடகோட்டையா! சென்னை மாகாண கைத்தறியாளர் தலைவர், அவர் கடிதம்:—

"சென்னை தேனாம்பேட்டையில் தற்போது நடைபெற்று வரும் அகிலஇந்திய சுதேசி கதர் பொருட்காட்சிக்கு நான் நேற்று மாலை விஜயம் செய்தபோது, அதில் சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆரம்பித்துள்ள ஒரு ஸ்டாலுக்குச் சென்றிருந்தேன். சுதேசி, கதர் பொருட் காட்சியாதலால், மேற்படி பொருட்காட்சியில் கைத்தறி துணிகளை விற்கக்கூடாது என்று அந்த ஸ்டாலுக்கு (கடைக்கு) தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் அறிந்து நான் ஆச்சரியமடைந்தேன். இப்படி தடை விதிக்கப்பட்டுள்ளதன் காரணம் எனக்குப் புரியவில்லை. அப்படி ஏதாவது ஆட்சேபம் இருந்தால் ஆரம்பத்திலேயே அந்தக் கடையை ஆரம்பிக்க பொருட்காட்சி அதிகாரிகள் அனுமதிக்காமல் இருந்திருக்கவேண்டும்.

பெண்கள் க்ஷேமாபிவிருத்தி சங்கம் ஆரம்பித்துள்ள கடையிலும், மற்றும் சில கடைகளிலும் கைத்தறி துணி விற்பனை அனுமதிக்கப்படுகிறது. சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைமட்டும் அப்படி அனுமதிக்காமல் பாரபட்சம் காட்டுவதேன்? இறக்குமதி செய்யப்பட்ட சில ரக ஜவுளிகள்கூட அந்த பொருட்காட்சியில் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக நம் நாட்டில் மிகப் பெரிய தொழிலான கைத்தறி நெசவு தொழிலின் நலனைப் பாதுகாப்பதில் சென்னை முதல் மந்திரி கொண்டுள்ள சிரத்தையை பொருட்காட்சி அதிகாரிகள் அறிந்திருப்பார்கள். கைத்தறி நெசவுத் தொழிலுக்கு எவ்வளவு தூரம் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதுபற்றி ஆராய மத்திய அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்துள்ளனர். காங்கிரஸ் சர்க்கார் இவ்விதம், கைத்தறித் தொழிலின் வளர்ச்சி விஷயத்தில் சிரத்தை செலுத்திவரும்போது, மேற்படி பொருட்காட்சியை நடத்தும் காங்கிரஸ் அதிகாரிகள்மட்டும், கைத்தறித் துணி விற்பனை விஷயத்தில் சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்துக்கு தடை விதித்துள்ளது ஆச்சரியமாக உள்ளது.

ஆகையால் இதுபற்றி பொருட்காட்சி அதிகாரிகள் தீர ஆலோசித்து, இத்தடையை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

★

**அண்ணாவின் புதிய நூல்கள்**

பொங்கல் புதுநாளில்

படித்து மகிழுங்கள்

| | |
|---|---|
| காதல் ஜோதி (புதிய நாடகம்) | 2—8—0 |
| ரங்கோன் ராதா (இனிய நவீனம்) | 2—8—0 |
| வள்ளிநாயகியின்கோபம் (கடவுட் கதைகள்) | 1—4—0 |

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை 1.

# கோவை மாவட்ட தி. மு. க.

## ஈரோட்டில் கூடியது

விபரங்கள்

28—12—52-ந்தேதி மாலை 4-மணிக்கு ஈரோடு டவுன் கரூர்ரோடு 28-நெ. கட்டடம்—ஈ. வெ. சத்திரத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெற்ற கோவை மாவட்டக்குழு நடவடிக்கைகள்.

மொத்தம் 86-பிரதிநிதிகளில் முப்பதுபேர் வந்திருந்தனர் 9-பேர் கூட்ட நடவடிக்கைகளை ஒப்புக்கொள்வதாகக் கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

1. மாவட்ட மாநாடு நடத்தும் விஷயம்: இரண்டாவது கோவை மாவட்ட மாநாடு—மேட்டுப்பாளையத்தில்—1953 பிப்ரவரி 15-க்குள் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டு—கீழ்க்கண்ட பதினைந்து தோழர்களை வரவேற்புக்குழு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு பத்து தோழர்களை மேட்டுப் பாளையம் கழகம் தேர்ந்தெடுத்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஈ. வெ. கி. சம்பத், செழியன், எஸ். ஏ. இராசமாணிக்கம், நடராஜ், எஸ். ஆர். சந்தானம், எஸ். சுப்பாவு, கே. எ. முருகேசன், நாராயணசிங், க. சு. திருமலைசாமி, பி. எ. சாமிநாதன், பாலசுந்தரம், அற்புதசாமி, பழனிசாமி, பொன்னுசாமி, முத்து. தோழர் ஷண்முகநாதன் (மேட்டுப்பாளையம்) அவர்களை அமைப்பாளர் (கன்வினர்) ஆகத்தேர்ந்தெடுக்கப்பட்டது.

2 வட்டக்குழு அமைத்தல்: கீழ்க்கண்ட வட்டங்களில் வட்டக்குழு அமைக்கலாம் என்றும்—ஈரோடு வட்டத்திற்கு ஈரோட்டிலும்; தாராபுரம் வட்டத்திற்கு வெள்ளகோவிலிலும்; உடுமலைப்பேட்டையிலும், பொள்ளாச்சி வட்டத்திற்கு ஆனைமலையிலும்; பல்லடம் வட்டத்திற்கு பல்லடத்திலும், கோயமுத்தூர் வட்டத்திற்குக் கோவையிலுமாக—வட்டக்குழு அமைப்புக் கூட்டத்தை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. நிதி உதவி: கோவைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சிற்றூர்க்கிளையும், மாவட்ட அலுவலகச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாயும், நகரக்கிளைகள் இரண்டு ரூபாயும், ஒவ்வொரு மாதமும் தருவதாக 1953 ஜனவரியிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்தந்த மாத நன்கொடைச் சந்தாத் தொகையை அதனடுத்த மாதம் பத்தாந்தேதிக்குள் செலுத்துவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

4. புயல் நிவாரணப் பணிகள்: பொதுச் செயலாளர் அண்ணா அவர்களைக் கலந்தாலோசித்து எங்கெந்த ஊர்களில் நாடகங்கள் ஏற்பாடு செய்யலாம் என்பதை முடிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

★

## காஞ்சிச் செய்தி

கடந்த பல மாதங்களுக்குமுன் காஞ்சியிலும் சுற்றுப்புறங்களிலும் காணாமற்போன குழந்தைகளில் 23-பேரை போலீசார் கண்டுபிடித்து, காஞ்சிக்குக் கொண்டுவந்ததாக அறிகிறோம். போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ஹூசேன் என்பவரது குழாம், இதற்கெனப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதாம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழைகட்குத் தந்தேன், கள்ளமார்க்கெட்டை ஒழித்தேன்! கருவினோர் உண்டு-உழமினோர் ஏராளம். அவர்களையெல்லாம் துடைத்துப் போட்டேன்-ஆனால், நீ? என்னைப் போல—ஏன்? என்னைவிட!—நீயும் ஒரு'புது வாழ்வு' பூத்ததேசத்தின் தலைவன்தான். ஆனால் நீ இருக்கும் நிலை என்ன? அரசு ஏறினாய்! ஆள்கிறாய்! அதிகாரம் எனும் துப்பாக்கி உன்னிடம் உண்டு, அதுமட்டும் தானே இருக்கிறது. அதோடு, நீ மகிழ்ந்துவிட்டாயே! அதனை இச்சித்திரம் காட்டட்டும்'' என்று எண்ணித்தானிருப்பார். அதனால் தான், அம்மையார் வியப்போடு பார்த்ததும், சுழட்டி, 'இந்தாருங்கள்! எடுத்துக்கொண்டுபோங்கள்!!' என்று தந்திருக்கிறார்.

நகிப்-தந்த வெகுமதி, சிந்தனையைக்கொட்டும் 'தேள்'. ஆனால், அந்தப்படத்தை ஆசியஜோதி உற்றுநோக்குவாரோ, என்னவோ? "செச்சே! இதென்ன படம். வர்ணமில்லை-அழகில்லை. ஆபாசம்'' என்று அவர், வெறுத்து ஒதுக்கினாலும், வியப்பில்லை. தங்கையிடம் சீறினாலும் ஆச்சரியமில்லை. ஏனெனில், இது போன்ற 'அழகற்ற' படங்களைக் காணவிரும்பமாட்டாராம், பண்டித நேரு! வெளியிட்டிருக்கிறார்—சில மாதங்களுக்குமுன், ராஜாஜி மண்டபத்தில்—"கோரமாக எங்கள் உருவங்களைத் தீட்டி, எங்கள் எதிரிலேயேவைத்து அவமானப்படுத்துகிறீர்கள்'' என்று.

இவர், ஆசிய ஜோதி! எப்படிப் பிடிக்கும், அந்தப்படம்? அதில் எழிலுமில்லை, வர்ணக் குழைப்புமில்லை! ஆனால் அருமையானபாடம் இருக்கிறது! அதனை அறியுமுன், தள்ளிவிடுவாரே வெறுப்புடன், நமது கலாரசிகர்! எங்கே அறியப் போகிறார், நகிப், அனுப்பிய 'எழுதாத கடிதத்தை'!

★

## குன்றத்தூர் வழக்கு தோழர்களுக்கு தண்டனை

குன்றத்தூரில் ஏழு முறை துப்பாக்கிப்பிரயோகம் செய்ததோடு, நமது தோழர்கள் மீதும், பொதுமக்களில் சிலர் மீதும், காங்கிரஸ் ஆட்சியினர் தொடர்ந்திருந்த வழக்கில், தோழர் என். வி. நடராசனும் இன்னும் சிலரும், 'நிரபராதிகள்' என தீர்ப்பளிக்கப்பட்டதை தோழர்கள் அறிவர். அவர்களைத் தவிர,மீதமிருந்தோர் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வந்தனர். அவர்களுக்கு தலா ரூ. 10 அபராதமும் தவறினால் ஒருவார சிறைத் தண்டனையும் அளித்து பூந்தமல்லி சப்—மாஜிஸ்டிரேட், தீர்ப்பளித்திருப்பதாக அறிகிறோம். விபரம், பிறகு.

## பொங்கல் மலர்

விலை ரூபாய் 1—0—0ஆக இருப்பதால், ஏஜண்டுத் தோழர்கள் தங்களுக்குத் தேவையான காப்பிகளுக்கு 5—1—53க்குள் எழுத வேண்டும்.

டிசம்பர் பில் பாக்கியும், மலருக்குரிய முழுத்தொகையும் (கழிவு நீக்கி) 5—1—53க்குள் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

### சந்தாதாரர்கள்

மலருக்காக அணா எட்டு அனுப்ப வேண்டும். சந்தா எண் குறிப்பிடப்படாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

நிர்வாகி

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram